වාර්ෂික වාර්තාව 2022

வருடாந்த அறிக்கை 2022

ANNUAL REPORT 2022









ආරක්ෂක සේවා අණ සහ මාණ්ඩලික විද්‍යාලය

பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கலலூரி

Defence Services Command and Staff College

வருடாந்த அறிக்கை
2022

உள்ளடக்கம்

		பக்க இல.
1.	வரலாறு	1 - 2
2.	தொலை நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்	3 - 4
3.	பதவிநிலைக் கல்லூரரியின் செயற்பாடுகள் மற்றும் நிறுவகக் கட்டமைப்பு	4 - 6
4.	பாடவிதானம்	6 - 8
5.	பயிற்சிச் செயற்பாடுகள்	8 - 34
6.	நிர்வாகம் மற்றும் படையின் செயற்பாட்டு வழங்கல்	34 - 38
7.	பரிந்துரை	39 - 40
8.	மீளாய்வு	40

இணைப்பு

அ	கணக்காளரின் அறிக்கை	அ 1
ஆ	நிதிக்கூற்றுக்கள்	ஆ 1 - ஆ 17
இ	உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரின் கூற்று	இ 1
ஈ	கல்வி அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம்	ஈ 1 - ஈ 5

அட்டவணைகள்

பக்க இல.

அட்டவணை - 1	பா.சே.க.ப. பாடநெறி 16 ஐப் பின்பற்றிய மாணவ அதிகாரிகளின் எண்ணிக்கை	07
அட்டவணை - 2	பா.சே.க.ப. பாடநெறி இல 16 இற்கு உரித்தான பெறுபேறுகள்	07
	வாகனப் பொழிப்பு	35
அட்டவணை - 3		
அட்டவணை - 4	இராணுவத்தினால் வழங்கப்பட்ட வாகனங்கள்	35 - 36
அட்டவணை - 5	கடற்படையால் வழங்கப்பட்ட வாகனங்கள	36
அட்டவணை - 6	விமானப் படையினால் வழங்கப்பட்ட வாகனங்கள்	36
அட்டவணை - 7	பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனங்கள்	36
அட்டவணை - 8	வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்கள்	36

வருடாந்த அறிக்கை - 2022

பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி

வரலாறு

1. பாதுகாப்புச் சேவை கடட்ளை மற்றும் பதவிநிலை கல்லூரி ஆரம்பத்தில் இராணுவ கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியாக 1998 மார்ச் மாதம் 16 ஆம் திகதி 26 மாணவ அதிகாரிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் கல்லூரி உத்தியோகபூர்வமாக முன்னாள் படைத்தளபதி லெபடினன் ஜெனரல் ஆர்டிஎஸ் தலுவத்த டபிள்யூடபிள்யூவீ ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ வீஎஸ்வீ யூஎஸ்பீ எல்ஓஎம் என்டீசீ பீஎஸ்சீ அவர்களின் அழைப்பின் பேரில் முன்னாள் ஜனாதிபதி அதிமேதகு சந்திரிகா பண்டாரனாயக குமாரதுங்க அவர்களால் 1998 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.


2. பிரித்தானிய இராணுவத்தின் பதவிநிலை கல்லூரியின் இரண்டு லெபடினன் கேர்னல்களின் ஆலோசனையில் பிரித்தானிய பதவிநிலை கல்லூரியின் பாடத்திட்டத்தைப் பின்பற்றி இலங்கை இராணுவத்தின் தேவைப்பாட்டிற்கு அமைவாக ஒரு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இராணுவத்தின் கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி, ஆரம்பத்தில் இவ் உத்தியோகத்தர்களால் பயிற்சி ஆவணங்கள் வழங்கியும் விரிவுரை உத்தியோகத்தர்களின் இயலுமையை மேம்படுத்துவதன் மூலம் கல்லூரியின் வெற்றிக்காக விசேட பங்களிப்பு வழங்கப்பட்டது.



1998 ஆகஸ்ட் 28 ஆம் திகதி கல்லூரி திறக்கப்பட்டது.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளின் கட்டளை மற்றும் பதவிநிலை கடமைகளின் போது தொழிற்திறன் அறிவு மற்றும் புரிந்துணர்வை விருத்திசெய்யும் நோக்குடன் இராணுவக் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இலங்கை கடறப்டை மற்றும் விமானப்படை அதிகாரிகள் சிலரும் இப் பாடநெறிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன் அவர்களும் இராணுவக் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி பாடநெறி இல.1 இன் பாடநெறியில் கலந்து கொண்டிருந்தனர். 1998 முதல் 2006 வரை கல்லூரியால் 252 பட்டதாரி அதிகாரிகள் உருவாக்கப்பட்டிருந்ததுடன் இராணுவ அதிகாரிகள் 208 பேரும், கடற்படை அதிகாரிகள் 22 பேரும், விமானப்படை அதிகாரிகள் 21 பேரும் ஒரு பொலிஸ் அதிகாரியும் இதில் உள்ளடங்குவர். நாடடில் நிலவும் பாதுகாப்பு நிலவரங்களுக்கு அமைவாக முப்படையின் ஒன்றிணைந்த பயிற்சியின் தேவைப்பாடு உணரப்பட்டிருந்தமையால் பதவிநிலைக் கல்லூரியால் முப்படையினருக்கு ஒன்றிணைந்த நியாய பூர்வமான மற்றும் பிரயோக ரீதியிலான பயிற்சிகளை 1998 ஆகஸ்ட் 28 ஆம் திகதி நிகழ்ந்த ஆரம்பிப்பு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், ஒன்றிணைந்த இராணுவப் பயிற்சிச் சூழலை உருவாக்குவதற்காக போர்த் தர்மங்கள் மற்றும் நோக்குகளை மீளக் கட்டியெழுப்பி இக்காலத்திற்கு பொருந்தும் வகையிலான ஒன்றினைந்த பயிற்சிப் பாடநெறியை அமைப்பதற்கு முன்வரப்பட்டது.

4. 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி, இலங்கை பாதுகாப்புப் படையின் முக்கிய மைல்கல்லாக அமைந்தது. உலகின் ஏனைய நாடுகளைப் போன்று முப்படை யினருக்கு நியாயபூர்வமானதும் செயற்பாட்டு ரீதியான பயிற்சி ஒன்றை வழங்குவதற்காக ஒரே இடத்தைத் தாபிப்பதற்காக பதவிநிலைக் கல்லூரி விசேட இடத்தைக் கொண்டமைந்திருந்தது. கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி எனும் பெயரில் தாபிக்கப்பட்ட இக்கல்லூரி ஜனாதிபதி அவர்களின் செயலாளர் திரு. லலித் விரதுங்க அவர்களால் உத்தியோகபூர்வமாக **பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியாக (பாசேகபக)** தாபிக்கப்பட்டது. இதற்கு இணையாக இராணுவ அதிகாரிகள் 36 பேரையும், கடறப்டை அதிகாரிகள் 8 பேரையும், விமானப் படை அதிகாரிகள் 10 பேரையும், உள்ளடக்கி பாதுகாப்புச் சேவை கட்டளை மறறும் பதவிநிலை கல்லூரி, முதலாவது பாடநெறியை அன்றைய தினம் பதிவு செய்து ஆரமபித்து வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டின் போது 2008 இன் 05 ஆம் இலக்க பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச் சட்டம் என அறிமுகமான அதிகாரச்சட்டத்தின் கீழ் 2008 பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் II ஆம் பகுதியின் மேலதிக இணைப்பாக வெளியிடப்பட்டது.



2007 ஜனவரி மாதம் 22 ஆம் திகதி பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி ஆரம்பிப்பு



பழைய சின்னம்



புதிய சின்னம்

"சிகிறுவனின் ரண தெரணட" அறிவினாலும் புத்தியினாலும் போரிடல்

5. கிரேகக் வரலாற்றில் குறிப்பிட்டவாறு ஆதர் மன்னனின் சின்னமாக விளங்கும் ஆந்தை அறிவை வெளிப்படுத்தும் பட்சியாக இனங்காணப்படுகின்றது. மத்திய யுகத்தில் அக்காலத்தில் வாழ்ந்த வணக்கத்திற்குரிய மற்றும் அறிஞர்களின் அறிவு, புத்திசாதுரியம் மற்றும் முதிர்வுத்திறனைப் பிரதிபலிக்கும் சின்னமான குறியீடாகவும் ஆந்தை அடையாளச் சின்னமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

6. உரோம நாட்டு புராணங்களில் குறிப்பிடப்பட்டவாறு யுத்தம் மற்றும் விவேகத்திற்கான அதிபதியாக மினர்வா பெண் தெய்வம் கருதப்படுகிறது. அவரது மிகப் பிரியமான பறவையாகவும் வாகனமாகவும் ஆந்தையே இருந்துள்ளது. ஆந்தையை அறிவின் சின்னமாகக் கருதி அப்பறவையே கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் சின்னமாக ஏற்றுக்கொளள்ப்பட்டுள்ளது. "சிஹுனுவனின் ரண தெரணட" என்ற தொனிப்பொருள் முன்வைக்கப்பட்டு இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதறக்காக செம்மஞ்சள் நிறப் பின்னணியில் இரு வாளக்ளாலும், கடும் நீல நிற பின்னணியில் நங்கூரத்தினாலும், இள நீல நிறப் பின்னணியில் அல்படோஸ் பறவையினாலும் சித்தரிக்கப்பட்டு அம் முக்கூறின் நடுவே ஆந்தை சித்தரிக்கப்பட்டு பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி உத்தியோகபூர்வச் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

தொலை நோக்கு

7. தெரிவு செய்யப்பட்ட முப்படை அதிகாரிகள் மற்றும் அரச நிறுவக அதிகாரிகளின் தொழிற்திறன் அறிவாற்றலை விருத்தி செய்து இராணுவ அதிகாரிகள் மேஜர் / லெபடினன் கேர்னல் தர பதவி நிலைகளிற்காகவும், கடறப்டை அதிகாரிகளில் லெபடினன் கொமாண்டர்/ கொமாண்டர் பதவி நிலைகளிற்காகவும் விமானப்படையின் அதிகாரிகள் வலுப்படுத்தும் தலைவர் / விங்ங் கொமாண்டர் பதவிகளிற்காகவும் ஏனைய அரச நிறுவனங்களின் அதிகாரிகள் அவர்களுக்கு உகந்த பதவிநிலைத் தரங்கங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தமது நிறுவகங்களில் கட்டளை மற்றும் பதவிநிலைத் தரங்களிற்காகப் பயிற்சி அளிப்பதும் கல்லூரியின் தொலைநோக்காகும்.

செயற்பணி

8. முப்படையில் இருந்து தேர்தெடுக்கப்பட்ட அதிகாரிகளிற்கு பதவிநிலை உத்தியோகத்தர் இரண்டாம் தரத்தினதும் இதற்கு மேலான பதவிகளில் கடமைகளைத் திறன்பட மேற்கொளவ்தற்காக தேவையான அறிவை வழங்குவதற்காகவும் அவர்களிடையே தனிப்பட்ட மற்றும் தொழிற்திறன் ஒழுக்கவியல் திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்காகவும் கட்டளை மற்றும் பதவிநிலை நியமனங்களில் ஆக்கபூர்வமாக செயற்படுவதற்கான இயலுமையை வழங்குவதே செயற்பணி ஆகும்.

நோக்கங்கள்

9. பிரதான நோக்கங்கள் பின்வருமாறாகும்

அ. யுத்தம் மறறும் சமாதானம் ஆகிய இரு சந்தர்ப்பங்களின் போதும் செயற்பட வேண்டிய விதம் மற்றும் இதற்கு உரித்தாக தொழிற் பண்புகள் குறித்தும் அறிந்திருத்தல்.

ஆ. எந்த விதத்திலுமான போர்ச் செயற்பாடடின் போதும் இராணுவத்தில் உள்ளடங்கியுள்ள போரின் அடிப்படைக் கோட்பாடுகளையும் தொழிநுட்ப முறைகள் தொடர்பாகவும் அறிந்துகொண்டு இதன் மூலம் பொதுவாக ஒன்றிணைந்து செயற்படுதல்.

இ. இராணுவப் படையணி அல்லது கடற்படை மற்றும் விமானப்படைகளில் இதற்கு இணையான மட்டத்தில் கட்டளையிடும் பொறிமுறைச் செயற்பாடுகள் தொடர்பான பகுப்பாய்வு ரீதியான அறிவு.


ஈ. இலங்கையின் ஆயுதமேந்திய இராணுவப்படையணியின் பங்கேற்பின் வியூகத்தை விருத்தி செய்து புரிந்துணர்வு தொடர்பாக அறிவூட்டல்.

உ. இலங்கையில் பாதுகாப்பு கொள்கை உருவாக்கப்பட்டுள்ள முறை மற்றும் இராணுவ வழியமைப்பு அதனுடன் தொடரபுபற்றுள்ள விதம் குறித்து அறிந்துகொள்ளல்.

ஊ. இலங்கையினதும் அதன் நட்புறவு நாடுகளினதும் பாதுகாப்புக் கொள்கைகளுக்கு தாக்கங்களை உண்டுபண்ணக் கூடிய தேசிய மற்றும் சர்வதேச விடயங்கள் தொடர்பான விளக்கம்.

பதவிநிலைக் கல்லூரரியின் செயற்பாடுகள் மற்றும் நிறுவகக் கட்டமைப்பு

10. அமைப்பு பதவிநிலைக் கல்லூரரியின் நிறுவகக் கட்டமைப்(MOD/CSCB/4/(73) 24 February 2013 ஆம் திகதி கடிதத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



11. விடயப் பொறுப்புக்கள்: பதவிநிலைக் கல்லூரியில் நோக்கங்களை எய்துவதற்காக அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகள் பின்வருமாறாகும்.

அ. ஆயுதமேந்திய இராணுவ உத்தியோகத்தர்களை பதவிநிலைக் கல்லூரியில் கல்விப் பாடநெறிகளிற்காக அனுமதித்தல்.

ஆ. பொலிஸ் திணைக்களம் அல்லது இலங்கைக்கு அப்பால் உள்ள இராணுவ அமைப்புகளின் அங்கத்தவர்களை கல்லூரிப் பாடநெறிகளைப் பயில்வதற்காக அனுமதித்தல்.

இ. கல்லூரியின் கல்விச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமைத்துவம் தொடர்பாகக் கற்பதற்காக அரச அதிகாரிகளுக்குப் பணம் செலுத்தி பாடநெறிகளைப் பயில்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

ஈ. மேலே அ, ஆ மற்றும் இ பந்திகளில் குறிப்பிட்டவாறு அவ் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட தேர்ச்சி நிலை மற்றும் திறன் மதிப்பீட்டிற்காக பரீட்சைகளை நடாத்துதல்.

12. **முகாமைத்துவ சபை** பதவிநிலை கல்லூரியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிறக்காக பின்வரும் அங்கத்தவர்கள் அடங்கிய முகாமைத்துவ சபைகக் அதிகாரம் வழங்கப்பட்டுளள்துடன் அச்சபை அரச பாதுகாப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்டுளள்து.

அ. பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் - தலைவர்
ஆ. பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்
இ. முப்படைகளின் தளபதி
ஈ. இராணுவத் தளபதி
உ. கடற்படைத் தளபதி
ஊ. வான் படைத் தளபதி
எ. பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (பாதுகாப்பு அமைச்சின் செயளாலர் சமூகமளிக்காத விடத்து)
ஏ. கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உபவேந்தர்.
ஐ. திரைச்சேரியின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.
ஒ. பா.சே.க.ப.க பிரிகேடியர் தொடரப்பாடல் - சபைச் செயலாளர்

13. **முகாமைத்துவ சபைக் கூட்டங்கள்** கல்லூரியின் பாடநெறியின் தரத்தை மேம்படுத்துவதறக்காகவும் கல்லூரியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கிலும் முகாமைத்துவ சபைக் கூட்டம் கூட்டப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டின் போது நான்கு முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

14. **கல்லூரியின் கல்விச்சபை** கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாகச் செயற்படுவதற்காக பின்வரும் அதிகாரிகள் அடங்கிய கல்விச்சபை நியமிக்கப்பட்டுளள்து.

அ. பா.சே.க.ப கொமடான்ட் - தலைவர்.
ஆ. கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உபவேந்தரின் பிரதிநிதி.
இ. பா.சே.க.ப.க பிரிகேடியர் இணைப்பாளர்
ஈ. இராணுவ பிரதான ஆலோசகர்.
உ. கடறப்டை பிரதான ஆலோசகர்.
ஊ. வான்படை பிரதான ஆலோசகர்.
எ. பா.சே.க.ப.க பிரதான பதவிநிலை அதிகாரி 1 - செயலாளர்.

15. **கல்லூரியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் கமிட்டி:** கல்லூரியின் கணக்குகள் மற்றும் நிதிசார் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பானதும் ஏனைய நடவடிக்கைகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்விற்காக பின்வரும் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அ. மேலதிகச் செயலாளர் பாதுகாப்பு அமைச்சு.
ஆ. பா.சே.க.ப.க கொமடான்ட்.
இ. பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் / பெண் அதிகாரி ஒருவர்.
ஈ. கணக்காய்வு அத்தியட்சகர் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்.
உ. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - பாதுகாப்பு அமைச்சு.
ஊ. பிரிகேடியர் தொடர்பாடல் - பா.சே.க.ப.க
எ. கர்னல் நிர்வாகம், லொஜிஸ்டிக் - பா.சே.க.ப.க.
ஏ. கணக்காளர் - பா.சே.க.ப.க.
ஒ. உள்ளக கணக்காளர்- பா.சே.க.ப.க.

பாடவிதான பரிந்துரை

16. பாடநெறியானது 03 மாத ஆரம்பத் தவணைகளில் மொத்தம் 4 தவணைகளைக் கொண்டதாகும்.

17. **முதலாம் தவணை** - அடிப்படைக் கல்வி (12 வாரங்கள்) இது 2021 ஜனவரி 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2022 ஏப்ரல் 09 ஆம் திகதி முடிவுற்றது. பின்வரும் பாடங்கள் முதலாம் கல்வித் தவணையின் போது பூரணப்படுத்தப்பட்டன.

அ. முப்படையினரின் பல்வேறு பிரிவுகள்.
ஆ. யுத்தத்தில் உதவி புரியும் சேவைப்படையினர்.
இ. கட்டளையிடல், கட்டளையிடலில் உதவி புரிதல் மற்றும் தீர்மானம் எடுத்தல்.
ஈ. யுத்த உபாயம், இராணுவ நடவடிக்கை மற்றும் யுத்தம்.
உ. புலனாய்வு மற்றும் பதவிநிலைக் கடமைகள்.
ஊ. பிரதான மற்றும் இராணுவப் படையணிச் செயற்பாடு வழங்கல் பதவிநிலைக் கடமைகள்
எ. இராணுவப் படையணிச் செயற்பாடு வழங்கல் பதவிநிலைக் கடமைகள்
ஏ யுத்த நடவடிக்கை படிமுறைகள்.
ஐ. ஆய்வு முறைமைகள்.
ஒ. இலங்கை பற்றிய கல்வி ஆய்வு

18. இரண்டாம் தவணை - யுத்த நடவடிக்கை செயற்பாடுகள் (13 வாரங்கள்) இது 2022 ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் 2022 ஜூலை மாதம் 20 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. இத்தவணையின் போது உள்ளடகக்ப்பட்ட பாடங்களின் பிரிவுகள் பின்வருமாறாகும்.

அ. வான் போர் செய்யும் முறை
ஆ. சர்வதேச தொடரப்புகள்
இ. சிவில் அதிகாரிகளுக்கு இராணுவ உதவி
ஈ. யுத்த நடவடிக்கை படிமுறைகள்
உ. தந்திரமுறைக் கல்வி.

19. மூன்றாம் தவணை - யுத்த வினைத்திறன் போர் செயற்பாடுகள் (11 வாரங்கள்) இத்தவணை 2022 ஆகஸ்ட் 08-ம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 14-ம் திகதி வரை நடாத்தப்பட்டதுடன் பின்வரும் பாடப் பிரிவுகள் இதன் கீழ் உளள்டக்கப்பட்டிருந்தன.

அ. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் பற்றிய பயிற்சிப் பட்டறை
ஆ. சர்வதேச தொடர்புகள்
இ. கூட்டு நடவடிக்கைகள்
ஈ. முகாமைத்துவம்
உ. கடல் யுத்த முறைகள்
ஊ. தீவிரவாத பதில் தாக்கல் யுத்த நடவடிக்கைச் செயற்பாடுகள்
எ. வெளிநாடடு கல்விச் சுற்றுலா.
ஏ. தந்திரோபாயக் கல்வி.

20. நான்காம் தவணை - முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்பம். (07 வாரங்கள்) இத்தவணை 2022 ஒக்டோபர் 25-ம் திகதி முதல் 2022 டிசெம்பர் 10-ம் திகதி வரை நடாத்தப்பட்டது. பின்வரும் பாடங்கள் இதில் உள்ளடகக்ப்பட்டிருந்தன.

அ. முகாமைத்துவம்.
ஆ. யுத்த நுட்பங்கள்.
இ. ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத்திற்கான செயற்பாடுகள்.
ஈ. யுத்த நடவடிக்கைகளுக்கான பயிற்சியளிப்பு
உ. பாதுகாப்பு.
ஊ. நிர்வாகக் கல்வி.
எ. அணு, உயிரியல் விஞ்ஞான மற்றும் இரசாயனப் போர் நடவடிக்கைகள்.

பா.சே.க.ப.க பாடநெறி இல.16 நடைமுறைப்படுத்தல்.

21. பாசேஅபக யின் 16-ம் இலக்க பாடநெறியை கற்ற மாணவ அதிகாரிகளின் எண்ணிக்கை பின்வருமாறு காட்டப்படுகின்றது.

இராணுவப்படை	கடற்படை	வான்படை	வெளிநாட்டுப் படை	சிவில்	மொத்தம்
76	26	25	22	-	149

அட்டவணை-1

22. பாடநெறியை கற்ற வெளிநாட்டு மாணவ அதிகாரிகளின் எண்ணிக்கை பின்வருமாறு காட்டப்படுகின்றது.

அ. பங்கலாதேஷ் - 3
ஆ. இந்தோநேசியா - 1
இ. மாலைத் தீவு - 1
ஈ. நேபாளம் - 2
உ. பாகிஸ்தான் - 3
ஊ. ருவாண்டா - 1
எ. செனகல் - 1
ஏ. இந்தியா - 3
ஐ. சம்பியா - 1
ஒ. சவுதி அரேபியா - 5
ஓ. ஓமான் - 1

23. பெறுபேறுகள், பாசேஅகபக யின் 16-ம் இலக்க பாடநெறியின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதோடு அதன் சுருக்கம் பின்வருமாறு அமைகின்றன.

பட்டம்	தோற்றியோர் எண்ணிக்கை	சித்திஎய்தியோர் எண்ணிக்கை
பிஎஸ்சி	149	149
எம்எஸ்சி	149	139

அட்டவணை - 2

24. பாதுகாப்புச் சேவைகள் கட்டளைகள் மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 16-ம் இலக்கப் பாடநெறியின் அனுமதிக்கப்பட்ட கல்விப் பாடங்களின் பரிந்துரைப்புக்கு ஏற்ப நடாத்தப்பட்டு வருகின்றன. முப்படை போதனாசிரிய அதிகாரிகள் மற்றும் தகைமைகள் பெற்ற விரிவுரையாளர்களினால் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. பாதுகாப்புச் சேவைகள் பற்றி பட்டப்பின் பாடநெறிகளுக்கு உரிய கல்வி பணித்திட்டத்திற்காக, தகைமைகள் பெற்ற கல்விமான்களினால் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன. அதற்கும் மேலாக மாணவ அதிகாரிகளின் அறிவை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு பல்வேறு முக்கிய அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கும் பங்குகொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகின்றன.

25. பாசேஅகபக யின் 16-ம் இலக்கப் பாடநெறிக் கல்வி 4 தவணைகள் உள்ளடக்கப்பட்டு இருப்பதோடு அவைகள் பயிற்சிச் செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

அ) பயிற்சிச் செயற்பாடுகள் (முதலாம் தவணையில் நடைபெறும் பயிற்சிகள்)

i) இராணுவப் படை பயிற்சிப் பிரிவு

(ஆ) **தண்டர் போல்ட் பயிற்சி** : இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு சனவரி மாதம் 22-ம் திகதி கல்லூரி வளாக பூமியில் நடாத்தப்பட்டதுடன் படையினரின் தாக்குதலின் போது ஆதார வெடி சத்தியை திட்டமிடுதல் பற்றிய விளக்கம் ஒன்று மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.



ஆ) **ஹோல்ட் பாஸ்ட் பயிற்சி**: இந்தப் பயிற்சி 2022-ம் அண்டு சனவரி மாதம் 20-ம் திகதி யுத்த இராணுவப் படை மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வலாகத்தில் நடாத்தப்பட்டதோடு, இதன் நோக்கமாவது, பாதுகாப்புச் செயற்பாடுகளின் போது பொறியியல் உதவி சேனைப்படை / காலாட்படை மட்டத்தில் திட்டமிடுதல் பற்றிய விளககம் ஒன்றை மாணவ அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதாகும்.



இ) **மாஸ்டர் ரயிடர் பயிற்சி**: இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு சனவரி மாதம் 20-ம் திகதி யுத்த இராணுவப் படை மாணவ அதிகாரிகளின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டதோடு, அதன் மூலம் பல்வேறு அரச கடமை சேவைகளுக்கான கடிதம் எழுதல், தற்போதுள்ள சட்டவிதிகள் மற்றும் முறைமைகள் பற்றிய சரியான மற்றும் அரிய பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.



ஈ) **தொழில்நுட்ப நொடேஷன் பயிற்சி:** இந்தப் பயிற்சியின் நோக்கமாவது, செயற்பாடுகளின் போது, செயற்பாட்டு கூடத்தினுள் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பணிக்குழு அதிகாரி ஒருவரினால் திடீரென ஏற்படும் நிலைமை ஒன்றை அறிந்து கொண்டு, தங்கள் கட்டளை இடுபவருக்கு, அந்த நிலைமையைப் பற்றிய செயன்முறைகள் பற்றிய அறிக்கை ஒன்றை ஒழுங்கு செய்து முன்வைத்தல், உண்மையான முன்பயிற்சி ஒன்றை வழங்குவதாகும். இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02-ம் திகதி யுத்த இராணுவப் படை மாணவ அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது.



உ) **கெரவன் பயிற்சி:** இந்தப் பயிற்சியின் மூலம் மாணவ அதிகாரிகளுக்கு நுட்பங்களைக் கொண்டு செயற்பாட்டாளர்களுக்கு முன் படையினரின் வாகனப் பிரயாணத்தை ஆரம்பித்தல் மற்றும் வாகன வரிசை சம்பந்தமாக பணிக்குழு நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடுதல் பற்றிய அறிவை வழங்குவதே நோக்கமாகும். இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி யுத்த இராணுவப் படை மாணவ அதிகாரிகளினால் கல்லூரி வலாகத்தில் நடாத்தப்பட்டது.



ஊ) **பெண்டோரா பொக்ஸ் பயிற்சி:** இந்தப் பயிற்சியின் நோக்கமாவது, சுருக்கமான அறிக்கை ஒன்றை ஒழுங்குபடுத்துவது பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முன் பயிற்சியை மேற்கொள்வதாகும். இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ம் திகதி யுத்த இராணுவப் படை மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது.



(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) **ரவுண்ட் ரொபின் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு சனவரி மாதம் 13-ம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சியின் நோக்கமாவது, மாணவ அதிகாரிகளின் யோசிக்கும் மற்றும் தீர்மானங்களை எடுக்கும் சுய நம்பிக்கை, தலைமைத்துவ பண்புகள் மற்றும் திறன்களை விருத்தி செய்தல், பொது மக்களின் முன் சுய நம்பிக்கையுடன், தலைவர் என்ற ரீதியில் கருத்துக்களை முன்வைப்பதற்குரிய திறன்களை வளர்ப்பதாகும்.



ஆ) **வாய்மொழித் திறன் பயிற்சி (Verbal D Training)** இந்தப் பயிற்சி 2022ம் ஆண்டு சனவரி மாதம் 22-ம் திகதி கல்லூரி வளாகத்தில் கடற்படை அதிகாரிகளினால் நடாத்தப்பட்டது. இங்கு மாணவ அதிகாரிகளுக்கு பேச்சு மொழியை விருத்தி செய்வதற்கான பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. விடயத்திற்குப் பொருத்தமான பேச்சு மேற்கொள்வதன் மூலம் அவர்களுக்குத் தங்களின் ஞாபக சக்திகள் மற்றும் விடய அறிவை சபையில் தெளிவாக முன்வைப்பதற்கான திறமையை விருத்தி செய்வதன் நோக்கமாக இந்தப் பயிற்சி நடாத்தப்பட்டது.



(இ) **கிலர் வேல் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022ம் ஆண்டு சனவரி மாதம் 27-ம் திகதி கல்லூரி வளாகத்தில் கடற்படை மாணவ அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டது. இங்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட விடய வழிகளின் மூலம் விடயங்களை ஒன்றுதிரட்டி முடிவுகளை மேற்கொள்வதற்கு உறுதியுரைகள்/பரிந்துரைகள் முன்வைக்கப்படும். அவ்வாறு ஒன்றுதிரட்டிய விடயங்கள் மாணவ அதிகாரிகளினால் எழுத்து மூலம் மற்றும் வாய்மொழி மூலம் முன்வைக்கப்படும். இங்கு மாணவ அதிகாரிகளின் விடய வழிமுறைகளில் விடயங்கள் திரட்டிக் கொள்வதற்கான திறமை மற்றும் முன்வைப்பதற்கான திறன்களை விருத்தி செய்வதே நோக்கமாகும்.



ஈ) **மெரிடைம் இஸ்ராடபி பயிற்சி:** இந்தப் பயிற்சி 2022ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி கல்லூரி வளாகத்தில் கடற்படை மாணவ அதிகாரிகளினால் நடாத்தப்பட்டது. கடற்படை சட்ட நியதிகள் உபாய நுட்பங்கள் பற்றிய அறிவை வளர்ப்பதே இதன் நோக்கமாகும்.



(உ) **கேஸ்ஸ்டட் ஒன் இன்டர்நஷனல் மெரிடைம் லோ** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி கல்லூரி படை அதிகாரிகளின் சர்வதேச கடற்படை சட்ட விதிகள் பற்றிய நிகழ்வுகள் கல்வி பிரயோகங்களை விருத்தி செய்வதே நோக்கமாகும்.



(3) வான்படை பயிற்சிப் பிரிவு

(அ) **சமயோசிதப் பேச்சுப் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022ம் ஆண்டு சனவரி மாதம் 12-ம் திகதி மற்றும் 13-ம் திகதிகளில் வான்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரியில் நடாத்தப்பட்டது. உடனடியாக வழங்கப்படும் தலைப்பு ஒன்றின் கீழ் தர்க்க ரீதியாக மறறும் அர்த்தம் உள்ள வகையில் குறுதிய நேரத்திற்குள் பேசுவதற்கான பயிற்சியை வழங்குவதே இதன் நோக்கமாகும்.



(ஆ) **நிபுணத்துவ பேச்சுப் பயிற்சி** இது 2022ம் ஆண்டு சனவரி மாதம் 20-ம் மற்றும் 21-ம் திகதி திகதிகள் வரை வான்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டதோடு, அவர்களுக்கு அளிக்கப்படும் ஏதாவது ஒரு தலைப்பின் கீழ் திட்டமிடப்பட்டு சரியாக கருத்துக்களை முன்வைப்பதற்கான திறமைகளை வளர்ப்பதே இதன் நோக்கமாகும்.



(இ) **சூதாசியா பயிற்சி** இந்தப் பயிற்சி 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 08-ம் திகதியில் இருந்து 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் திகதி வரை வான்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பயிற்சி தனியாள் பயிற்சிகளை பயிற்றுவிக்கும் நோக்கமாக மேற்கொள்ளப்பட்டதாகும். அங்கு ஏதாவது ஒரு தலைப்பின் கீழ் சரியாக விபரங்கள் தொகுக்கப்பட்டு, அவற்றை வெற்றிகரமாக முன்வைப்பதற்கு உரிய திறமைகளை விருத்தி செய்யும் நோக்கமாகும்.



ஈ) **தண்டர் ஸ்டரய்யிக் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் திகதியில் இருந்து மார்ச் மாதம் 20-ம் திகதி வரை வான்படை மாணவ அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்டதோடு, அங்கு இதன் நோக்கமாக, மாணவ அதிகாரிகளினால் செயலாற்றுகைகளுக்காக வான்படைப் பலத்தை செயற்பாட்டில் ஈடுபடும் திறமைகளை மேலும் வளர்ப்பதே நோக்கமாக பயிற்சி வழங்கப்படுவதாகும்.



(உ) **வான் தாக்குதல் பயிற்சிகள்** இது 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் மற்றும் 26-ம் திகதியில் வான்படை மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இங்கு வழங்கப்படும் வான் தாக்குதல், போர்ப் பயிற்சிகள் மூலமாக மாணவர்களுக்கு இடையில் காணப்படும் தனிப்பட்ட திறமைகளைத் தனித் தனியாகப் பரீட்சித்தல் மற்றும் பயிற்சி அளிக்கும் நோக்கமாக மேற்கொள்ளப்பட்டது.



4) முப்படையினருடன் இணைந்த பயிற்சி

(அ) **வட்ட மேசைப் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி எல்லா மாணவ அதிகாரிகளுக்குமாக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சிகளின் மூலம் கலந்துரையாடல் குறிப்புக்களை எழுதும் திறன் விருத்தியை நோக்கமாகக் கொண்டதாகும்.



ஆ) **டுடோரியல் எஸ்ட்மேட் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ம் திகதி வரை கல்லூரி வளாகத்தில் போரில் படை மற்றும் கடற்படை மாணவ அதிகாரிகளுக்கான பயிற்சி நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சியின் நோக்கங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன.

i) போர் செயலாற்றுகைகளுக்கான யுத்தத்திற்கான உத்தேச மதிப்பீட்டை ஒழுங்கு செய்யும் போது, அதற்கான நுண்ணறிவுத் தகவல்களைத் திரட்டுதல் மற்றும் அந்த நுண்ணறிவு தகல்வகள் மூலம் திட்டங்களை ஆயத்தஞ் செய்யும் செயலாற்றுகை வழிமுறைகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.

ii) இராணுவப் படைப் பிரிவு மட்டத்தில் போர் பயிற்சிகளுக்கு போர் செய்வதற்கான உத்தேச மதிப்பீட்டை ஒழுங்கு செய்யும் நுண்வாண்மை முறைமைகள் மற்றும் அவை பற்றிய பணிக்குழு அறிவைப் பெற்றுக் கொடுப்பதுவும், அவற்றை பிரயோகப் பயன்பாட்டில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான பரந்த விளக்கங்களைப் பெற்றுக் கொடுப்பதுமாகும்.



இ) **குறிப்புப் புத்தகம் வெரடன் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 05-ம் திகதி வரை கல்லூரி வளாகத்தில் போர்ப் படை மற்றும் கடற்படை மாணவ அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சியின் நோக்கமாவது முன்வைத்தல் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக் கொடுப்பதாகும்.



ஆ. இரண்டாம் தவணையில் மேற்கொள்ளப்படும் பயிற்சிகள்

இராணுவ் போர்ப் படைப் பயிற்சிப் பிரிவு

(அ) **பிராஸ்டெக் பயிற்சி** இந்தப் பயிற்சி கம்பஹா அஸ்கிரி ரஜமஹா விகாரைப் பிரதேசத்தில் 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. இங்கு படைச்சேனை / படை வீரர் மட்டத்தில் பாதுகாப்பாக நிலைப்படுத்தல் பற்றிய திட்டமிடுதல் பற்றிய பயிற்சிகளை அளிப்பதே நோக்கமாகும்.



ஆ) **சைனிங் ஆமர் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் திகதி கல்லூரி வளாகத்தில் போர்ப் படை மாணவ அதிகாரிகளுக்கு நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சியின் நோக்கமாவது, செயற்படுத்தும் கட்டளைகள் உண்மையான பயிற்சி மேற்கொள்வதாகும்.



இ) **அபர் கட் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு மே மாதம் 06-ம் திகதியில் இருந்து 2022ம் ஆண்டு மே மாதம் 08-ம் திகதி வரை போர்ப் படை மாணவ அதிகாரிகளுக்காக நாரம்மல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டது. போர்ப் படை மட்டத்தில் தாக்குதல் செயலாற்றுகைகளை திட்டமிடுதலுக்கான பயிற்சிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.



ஈ) **கெரியர் பிஜன் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022ம் ஆண்டு யூலை மாதம் 06-ம் திகதியில் இருந்து 2022ம் ஆண்டு யூலை மாதம் 10-ம் திகதி வரை கல்லூரி வளாகத்தில் வான் படை மாணவ அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்டது. இதன் நோக்கமாவது போர்ச் சட்ட விதிகளுக்கு ஏற்ப படைப் பகுதிகளின் மட்டத்திற்கு தாக்குதல்கள் மற்றும் பாதுகாப்பான நடவடிக்கைகளுக்கு ஏற்ப, நுண் உபாய முறைமைகளைக் கொண்டு போர்ச் செயலாற்றுகைகளை மேற்கொள்வது பற்றி அறிவினை அளிப்பதாகும்.



கடற்படை பயிற்சிப் பகுதி

(அ) **ஹார்ட் பன்ச் (கடின வெடி) பயிற்சி** இந்தப் பயிற்சி 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டன. இதன் நோக்கமாவது கடற்படை மாணவ அதிகாரிகளுக்கு கடற்படை துணையான வெடி வைத்தல் பலத்தை திட்டமிடுதல் மற்றும் அவை தொடர்பாக ஆயத்தஞ் செய்து கொள்ளக்கூடிய நவீன முறைமைகள் பற்றிய அறிவை, ஆற்றலை அளிப்பதாகும்.



(ஆ) **யுலய்ஸிஸ் பயிற்சி** இது 2022ம் ஆண்டு மே மாதம் 02-ம் திகதியில் இருந்து மே மாதம் 07-ம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் நோக்கமாவது, செயன்முறைகளைத் திட்டமிடும் போது தார்மீகக் கோட்பாடுகளின் முக்கியத்துவம் பற்றி அவர்களுக்கு ஆழுத்தம் கொடுப்பதாகும்.



இ) **தண்டர் ஸ்டரயிக் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு மே மாதம் 24-ம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது. கடற்படை மாணவ அதிகாரிகளின் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் கடற்படை போர் உபாயங்கள் பற்றிய அறிவினை மேலும் முன்னேற்றுவதே இதன் நோக்கமாகும்.



ஈ) **கொண்டிகி பயிற்சி** இது 2022-ம் ஆண்டு யூலை மாதம் 06-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு யூலை மாதம் 08-ம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளுக்கு கித்துல்கலையில் இருந்து கொஸ்கமை வரையான பிரதேசங்களில் களனி கங்கை அண்மித்ததாக மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பயிற்சி மாணவ அதிகாரிகளின் தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்வதற்காகவும், ஆக்கத் திறன்கள் மற்றும் தொழில்வான்மைகளை ஏற்படுத்தும் பிரயோக சவால்களுக்கு உரிய செயலாற்றுகைகள் ஊடாக அவர்களின் சுயபலத்தை / ஆத்மசகதியை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.



ஒன்றினைந்த பயிற்சிகள

அ) **ஒக்டோபஸ் பயிற்சி** இது 2022-ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி வரை கடற்படை மற்றும் வான்படை மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. கடல் மற்றும் வான் செயலாற்றுகைகளைத் திட்டமிடுதல் மற்றும் செயலாற்றுகைகளில் ஈடுபடுத்தல் பற்றி பயிற்சிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.



ஆ) **கொள்கிறீட் ஜங்கல் பயிற்சி** இது 2022-ம் ஆண்டு மே மாதம் 20-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி வரை போர்ப்படை மற்றும் வான்படை மாணவ அதிகாரிகளுக்காக குருநாகலை அதுகல பிரதேசத்தில் நடாத்தப்பட்டது. நகர்ச் சூழலில் தாக்குதல்கள் மற்றும் பாதுகாப்பான நடவடிக்கைகளுக்கான காலட்படைப் பகுதி மட்டத்தில் திட்டமிடுதல் பற்றிய விளங்கங்களைப் பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.



இ) **கோல்டன் சீல்ட் பயிற்சி** இது 2022-ம் ஆண்டு மே மாதம் 31-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு யூன் மாதம் 09-ம் திகதி வரை முப்படை அதிகாரிகளுக்கென கலேவெல, தம்புல்ல மற்றும் நாவுல பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டது. படைச்சேனை மற்றும் காலட்படைப் பகுதி மட்டத்தில் பாதுகாப்பான தாக்குதல்களின் போது தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன் மற்றும் வான்படை சக்தியை வழங்குதல் பற்றிய பயிற்சி ஒன்றை மாணவ அதிகாரிகளுக்கு வழங்குவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.



ஈ) **செடோ டான்ஸ் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு யூன் மாதம் 21-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு யூலை மாதம் 28-ம் திகதி வரை போர்படை, வான்படை மற்றும் கடற்படை ஆகிய மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாக பூமியில் மேற்கொள்ளப்பட்டது. போர் திட்டங்களை பரீட்சிக்கும் விதிமுறை (War Game) ஒன்றின் மூலம் திட்டங்களை உறுதிப்படுத்திக் கொள்ளல், மற்றும் படைப் பகுதிகளின் மட்டத்தில் ஒன்றினைந்த வழிமுறைகளைத் திட்டமிடுதல் ஆகியவற்றுக்கான பயிற்சி அளித்தல் இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.



உ) **பர்பல் டர்டல் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு யூலை மாதம் 15-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு யூலை மாதம் 19-ம் திகதி வரை காலத்திற்குள் முப்படை மாணவ அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டது. கடலில் மற்றும் தரையில் உயர்ந்த தாக்குதல் நடவடிக்கைகளுக்காக பயிற்சி ஒன்றை அளிப்பதே இதன் நோக்கமாகும்.



(இ) மூன்றாம் தவணையில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள்

(1) போர்ப் படைப் பயிற்சிப் பிரிவு

(அ) **இன்க் பிலொட் பயிற்சி** இது 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 10-ம் திகதி போர்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரியின் வளாக பூமியில் மேற்கொள்ளப்பட்டது. படைப்பிரிவு மட்டத்தில் பயங்கரவாத எதிர்ப்பு செயற்பாடுகளுக்கான ஆட்களை ஒழுங்கு செய்யும் திட்டமிடுதல் பற்றிய விளக்கம் பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்.



(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு

அ) **செலமெண்டர் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 23-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு 30-ம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளினால் கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டதோடு, மாணவ அதிகாரிகளுக்கு ஒன்றினைந்த போர்த் திட்டமிடுதலுக்காக பயிற்சி ஒன்று வழங்கப்பட்டது.



ஆ) **டிரைடண்ட் பயிற்சி** இது 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதியில் இருந்து 30-ம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளிக்கென திருகோணமலை கடற்படைத் தலைமைப் பீடத்தில் நடைபெற்றது. இங்கு திடமான திட்டமிடுதல் பற்றிய பயிற்சி ஒன்றை வழங்குவதே நோக்கமாகக் காணப்பட்டது.



இ) **மர்லின் ஸ்பயிக் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 26-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு செம்தம்பர் மாதம் 30-ம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளுக்கான கல்லூரி வளாகத்திலே நடைபெற்றது. இந்த பயிற்சி கிளர்ச்சி / கலவரங்கள் போன்ற அவசரகாலச் சந்தர்ப்பங்களில் கடற்படை கடல் மார்க்கத்தில் செயலாற்றுகைகளை மேற்கொள்ள வேண்டிய முறைமைகள் தொடர்பாக மாணவ அதிகாரிகளுக்கு விளக்கங்களை ஏற்படுத்துவதற்கு விஷேடமாக ஒழுங்கு செய்யப்பட்டதாகும்.



ஈ) **மென் ஓப் சோ பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 08-ம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த

பயிற்சியில் கடற்படை போர் நடவடிக்கைகளை திட்டமிடும் செயற்பாடுகளுக்காக தேவையான பணிக்குழு அறிவை மேலும் முன்னேற்றுவதே நோக்கமாகும்.



உ) **ப்ரூடண்ட் பயிற்சி** இந்த பயிற்சி 2022-ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 05-ம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாகத்திலே நடாத்தப்பட்டது. இங்கு 2025-ம் ஆண்டுக்கான கடற்படை உபாய நுட்பவழி முறைமைகள் எண்ணக் கருத்துகளுக்கு உடந்தையாக மாணவ அதிகாரிகளினால் எதிர்கால இலங்கை கடற்படைக்கு பொருத்தமான ஒரு கப்பலின் பண்புகள் பற்றி முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டது.



(3) வான்படை பயிற்சிப் பிரிவு

அ) **ரொக்ஸ்ஏப்ஸ் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 27-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 02-ம் திகதி வரையான காலம் வான்படை மாணவ அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றதோடு, வான்படை சீனத்துறைமுகம் முகாமாக்குச் சென்று அங்கும் இந்தப் பயிற்சிகள் பிரயோக ரீதியில் மேற்கொள்ளப்பட்டதோடு, முகாம்களின் பாதுகாப்பு சட்டவிதிகளை திட்டமிடுதல் பற்றி தர்க்க ரீதியாக மற்றும் செயற்பாட்டு ரீதியில் பின்பற்றிக் கொடுப்பதே இந்தப் பயிற்சிகளின் நோக்கமாகும்.



4) ஒன்றினைந்த பயிற்சி

அ) **ஸ்லேஜ் ஹெமர் பயிற்சி** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 24-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 01-ம் திகதி வரை போர் மற்றும் வான்படை மாணவ அதிகாரிகளினால் ஒன்றினைந்து கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பயிற்சி மூலமாக செயற்பாட்டு ரீதியான போரை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான பயிற்சிகள் பெற்றுக் கொடுப்பதோடு அதன் மூலமாக பின்வரும் பயிற்சிகள் / கல்வி பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

i) செயலாற்றுகை / நுட்பமுறைகள் மட்டத்தில் பயங்கரவாத எதிர்ப்பு போர் நடவடிக்கைகள் செயற்பாட்டு முறைமைகள் பயிற்சி
ii) பயங்கரவாத செயற்பாட்டு முறைமைகளுக்கான பாதுகாப்பான போர் திட்டமிடுதல் பற்றிய கல்வி
iii) போர் பயிற்சி நடவடிக்கைகள் பயிற்சிகளின் மூலம் கல்வியைப் பெற்றுக் கொடுத்தல்



ஆ) நான்காவது தவணையில் நடாத்தப்பட்ட பயிற்சியிகள்

(1) போர்ப்படைப் பயிறிசிப் பிரிவு

அ) **கயிடின்ங் லயிட் பயிற்சி:** இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 26-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 28-ம் திகதி வரை கல்லூரி வளாக பூமியில் நடாத்தப்பட்டதோடு, போர்ப்படைப் பயிற்சி கொள்கைகளுக்கு ஏற்ப, படைகளுக்கு பயிற்சிப் போதனாசிரியராகச் செயற்படுவதற்கு பயிற்சி ஒன்றை பெற்றுக் கொடுப்பது இந்தப் பயிற்சியின் நோக்கமாக அமைகின்றது.



ஆ) **கோஸ்ட் வோக் பயிற்சி** (கோஸ்ட் நடைப் பயிற்சி) இந்தப் பயிற்சி 2022-ம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 25-ம் திகதி வெலிவேரிய பூகொட மற்றும் கிரிந்திவெல ஆகிய பிரதேசங்களில் போர்ப்படை மாணவ அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டன. போர் நுட்பத்திட்டம் முறைகள் பற்றி மற்றோர் இல்லாது எழுத்து மூல படை அணி மட்டத்தில் நிகழ்த்தப்பட்ட போர் பயிற்சிகள்

என்பதோடு அவை போர் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு ஏற்ப, அமைக்கப்பட்டு, படை அணி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சியாகும்.



(2) ஒன்றிணைந்த பயிற்சி

(அ) **மெக்னம் போஸ் போர்ப் பயிற்சி** இது 2022-ம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 31-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 31-ம் திகதி வரை கல்லூரி வளாககத்தில் நடாத்தப்பட்டதுடன், இது பணிக்குழு அதிகாரி / பதவிநிலை ஒருவர் நுட்ப முறைமைகள் செயற்படுத்தும் போது சரியான தீர்மானத்தை எடுத்தல் மற்றும் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதன் நோக்கமாக பயிற்சி ஒன்றை அளிப்பதன் நோக்கமாக மேற்கொள்ளப்பட்டன.



ஆ) **குர்சிபல் பயிற்சி** 2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதியில் இருந்து 2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி வரை முப்படை மாணவ அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் கல்லூரி வளாககத்தில் நிகழ்த்தப்பட்டது. அவசர பொது மக்களின் தேவைகள், மற்றும் உள்ளக வழிகாட்டல்களுக்கு முப்படையினரும் அழைக்கப்படும் போது அச்செயற்பாடுகளுக்காக திட்டமிடுதல், நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு ஒன்றிணைந்த பயிற்சி ஒன்றை வழங்குவது இதன் நோக்கமாகும்.



இ) **ரெட் இன்க் கரெக்ஷன் (1 தவணை) பரீட்சை** இந்தப் பரீட்சைப் போர்படை, கடற்படை மற்றும் வான்படை பிரிவுகளின் கீழ் நிகழ்த்தப்பட்டதுடன், இங்கு மேற்கொள்ளப்படுவது, என்னவெனில் எல்லாக் கல்வித் தவணையிலும், அந்தத் தவணைக்குள் கற்றுக் கொண்ட பாடங்களுக்கு ஏற்ப எழுத்து மற்றும் கணனி சார்ந்த பரீட்சைகளை மேற்கொள்வதாகும்.

(1) போர்ப் படைப் பயிற்சிப் பிரிவு
அ) மாஸ்டர் ரயிடர் பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03-ம் திகதி நடாத்தப்பட்டது.
ஆ) (வட்ட மேசை) ரவுண்ட் டேபல் பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி நடாத்தப்பட்டது.

(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு
அ) மாஸ்டர் ரயிடர் 2 பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03-ம் திகதி நடாத்தப்பட்டது.
ஆ) (வட்ட மேசை) ரவுண்ட் டேபல் பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி நடாத்தப்பட்டது.
இ) ஐஎம்எல் பரீட்சை 2021-ம் ஆண்டு மார்ச் மாதம் 08-ம் திகதி நடாத்தப்பட்டது.

(3) வான்படைப் பயிற்சிப் பிரிவு
அ) மாஸ்டர் ரயிடர் 2 பயிற்சி 2022-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03-ம் திகதி நடாத்தப்பட்டது.
ஆ) லயிட்னின் ஸ்டரயிக் பயிற்சி 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

ஈ) ரெட்இன்ங் கரெக்ஷன் (தவணை 2) பரீட்சை

(1) போர்ப் படை பயிற்சிப் பிரிவு
அ) அபர் கட் பயிற்சி 2022-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி மேற்கொள்ளப்பட்டது.
ஆ) கோல்டன் ஷீல்ட் பயிற்சி 2022-ம் ஆண்டு யூன் மாதம் 09-ம் திகதி நடாத்தப்பட்டது.
இ) ஷெடோ டான்ஸ் பயிற்சி 2022-ம் ஆண்டு யூன் மாதம் 29-ம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு
அ) ஸ்மோக் ஸ்டரெக் பயிற்சி 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி நடாத்தப்பட்டது.
ஆ) யுலிசீஸ் பயிற்சிச் செய்முறை செயற்பாடு 2022-ம் ஆண்டு மே மாதம் 09-ம் திகதி நடாத்தப்பட்டது.

(3) வான்படைப் பயிற்சிப் பிரிவு
அ) தண்டு மொனரா பயிற்சி 2022-ம் ஆண்டு மே மாதம் 07-ம் திகதி நிகழ்த்தப்பட்டது.
ஆ) கோல்டன் ஷீல்ட் பயிற்சி 2022-ம் ஆண்டு யூன் மாதம் 09-ம் திகதி நடாத்தப்பட்டது.
இ) டிரகன் பிளய் பயிற்சி 2022-ம் ஆண்டு யூலை மாதம் 04-ம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

உ) ரெட்இன்ங் கரெக்ஷன் (தவணை 3) பரீட்சை

(1) போர்ப் படை பயிற்சிப் பிரிவு
அ) ஸ்லேஜ் ஹெமர் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 30-ம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு
அ) டிரயிடண்ட் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 04-ம் திகதி நடாத்தப்பட்டது.
ஆ) மார்லின் ஸ்பயிக் பயிற்சி 2022-ம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 01-ம் திகதி நடாத்தப்பட்டது.

(3) வான்படைப் பயிற்சிப் பிரிவு

அ) எல் பட்ராஸ் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 24-ம் திகதி நடாத்தப்பட்டது.

ஆ) எயார் டிடரன்ஸ் பயிற்சி 2022-ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 05-ம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

ஊ) ரெட்இண்ங் கரெக்ஷன் (தவணை 4) பரீட்சை

(1) போர்ப் படை, கடற்படை வான்படை பயிற்சிப் பிரிவு

அ) கயிடிங் லயிட் பயிற்சி 2022-ம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் 27-ம் மற்றும் 30-ம் திகதி வரை நடாத்தப்பட்டது.

ஆ) படை நிறைவேற்று மாணவ தேடிக் கண்டறிதலுக்கான முன்வைத்தல் மற்றும் பேச்சு மொழிப் பரீட்சை 2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் திகதியில் இருந்து 22-ம் திகதி வரை நடாத்தப்பட்டது.

26. எல்லா மாணவ அதிகாரிகளுக்குமான பாதுகாப்பு பட்டப் பாடநெறியில் கல்விப் பாடங்களுக்கான பின்வரும் பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

அ) இரண்டாம் தவணை – இலங்கை வரலாறு மற்றும் கசர்வதேச தேசிய நடவடிக்கைகள் பாடத்திற்கான பரீட்சை 2022-ம் ஆண்டு ஏபரல் மாதம் 25ம் தியதியில் இருந்து மே மாதம் 30-ம் திகதி வரை நடாத்தப்பட்டது.

ஆ) மூன்றாம் தவணை – நுண்மார்க்கக் கல்விப் பரீட்சை 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி நடாத்தப்பட்டது.

இ) நான்காம் தவணை – முகாமைத்துக் கல்விப் பரீட்சை 2022-ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 28-ம் திகதி நடாத்தப்பட்டது.

27. முன்வைத்தல் 16-ம் இலக்கப் பாடநெறிகளுக்கான மாணவ அதிகாரிகளினால் பாடநெறிக் காலத்தில் பின்வரும் தலைப்புகளின் கீழ் முன்வைக்கப்பட்டன.

அ) 1-ம் தவணை

(1) போர் தலைவர்களின் தலைமைத்துவம் மற்றும் கட்டளை இடுதல் பற்றி கற்று முன்வைத்தல் (போர்ப் பயிற்சிப் பிரிவு) பின்வரும் புகழ்மிக்க போர்படை விரர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கல்வி மாணவ அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்டன.

அ) ஜனரல் நோர்மன் ஸ்ஜ்அர்ஸ் கொப்ஸ்
ஆ) பீல்ட் மார்ஷல் எரிஷ் வொன் மன்ஸ்தெ இன்
இ) மெரிடல் ஒப் த சோவியட் யுனிஒன் ஜவின் கொனவே
ஈ) பீல்ட் மார்ஷல் ஒகஸ்ட் வொன் மெகன்சன்
உ) ஜனரல் டொமொயுகி யமசிட்ட
ஊ) ஜனரல் தடமிஷி குரிபயசி
எ) முஹம்மட சிஇஅ – உல்ஹஜ்
ஏ) அஹமட் ஷஹ் மோஸ்ஸொவுட் (லியொன் ஒப் என்ஜ்ஷிர்)
ஐ) ஜனரல் டக்லஸ் மெக்ளர்துர்
ஒ) பீசல்ட் மார்ஷல் எர்வின் ரொமேல்
ஓ) டீ.ஈ. லோரன்ஸ் (லோரன்ஸ் ஒப் அரேபியா)
ஔ) ஜனரல் ஜோர்ஜ் பெட்டொன்
க) பீல்ட் மார்ஷல் பர்னார்ட் மொன்ட்கொமேரி
ங) மேஜர் ஜனரல் ஷெஸ்ட்யி மேரியு புல்லெர்
ச) மோஷி டயன்
ஞ) ஜனரல் ஹெய்னிக்ஸ் குடேரியன்
ட) டேவிட் டி இசெஹொவர்
ண) லூதிதன் ஜெனரல் டன்சில் கொப்பேகடுவ

த) மேஜ ஜெனரால் விஜய விமலரத்ன
ந) பீல்ட் மார்ஷல் செம் மனேக்ஷவ்

ஆ) 2-ம் தவணை

1) போர் பற்றிய கற்கைகளை முன்வைத்தல்: பின்வரும் குறிப்பிடப்படும் போர் செயல் முறை செயற்பாட்டு கல்வி பற்றி மாணவ அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்டன
அ) நெப்போலியின் ருஷ்ய ஆக்கிரமிப்பு 1812
ஆ) வோர்ட்டர்லு யுத்தம் (1815)
இ) ஜெர்மன் வசந்த தாக்குதல் (1918)
ஈ) இரண்டாவது சீன யப்பான் யுத்தம் (1937-1945)
உ) பெல்ஜியம் யுத்தம் (மே 1940)
ஊ) பிரான்ஸ் யத்தம் (மே – யூன் 1940)
எ) மாலிமா தாக்குதல் நடவடிக்கைகள் (தெசம்பர் 1940 – பெப்ரவரி 1941)
ஏ) மலாயா தாக்குதல் (திசம்பர் 1941 – சனவரி 1942)
ஐ) யப்பான் பர்மாவை (மியன்மார்) கைப்பற்றிக் கொள்ளல் (சனவரி – மே 1942)
ஒ) சிங்கப்பூர் யுத்தம் (பெப்ரவரி 1942)
ஓ) நேசப் படைகள் இத்தாலியை ஆக்கிரமித்தல் (செப்தம்பர் 1942)
ஔ) மிக உக்கிர தாக்குதல் போர் (யூன் - ஆகஸ்ட் 1944)
க) பரீஸில் இருந்து ரயின் வரை நேசக் கட்சியினர் முன் தாக்குதல் போர் (ஆகஸ்ட் - செம்தம்பர் 1944)
ங) நெதர்லாந்துப் போர் (ஒக்தோபர் - நவம்பர் 1944)
ச) ஹிரோஷிமா மற்றும் நாகசாக்கி குண்டுத் தாக்குதல் (1945)
ஞ) கொரிய யுத்தம் (யூன் 1950 – யூலை 1953)
ட) டிரன்ங் இறுதிப் போர் (நவம்பர் 1965)
ண) ஆறு நாள் யுத்தம் (யூன் 1967)
